எண்ணிக்கை 1,248, 1,541, 1,076 ஆகும் அதேபோல் கடந்த மூன்று ஆண்டுகளில் மருத்துவ சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட உள் நோயாளிகள் 1975ல் 260, 1976-ல் 242, 1977-ல் 399. ஆகவே, தேவையான அளவுக்கு படுக்கை வசதிகளும். மருந்து வசதிகளும் அங்கே இருக்கின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இப்படி இடம் இல்லாத காரணத்தால்தான் அனுமதி மறுக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அபிவிருத்தி செய்தால் வசதியாக இருக்கும். அதை இப்பொழுது அனுமதிக்கவில்லை என்ற காரணத்தை காட்டி புறக்கணிக்கக்கூடாது. அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றித்தரவேண்டும் என்றும் அதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, பிரசவத்திற்காக வந்த பெண் நோயாளிகள் யாரும் அப்படி இடம் இல்லை என்று திருப்பி அனுப்பப்படவில்லை. அவர்களுக்கு வேண்டிய எல்லா மருத்துவ வசதிகளும் அளிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே எந்தவிதமான புகாரும் மக்களிடத் திலிருந்தும் வரவில்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை.

* வினா எண். 499— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஒரு மாதத்துக்கு நோயாளிகளுக்கு மொத்தம் மருந்து செலவு எவ்வளவு ஏற்படுகிறது ?

(ஆ) முக்கியமான பல மருந்துகள் நோயாளிகளுக்கு கிடைப் பது இல்லை என்ற புகார்கள் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்வி மருத்துவமனையில் உள் நோயாளிகளுக்கும் வெளிநோயாளிகளுக்கும் சேர்த்து ஒரு மாதம் மட்டும் ரூ. 2,87,356 மதிப்புள்ள மருந்துகள் அளிக்கப்பட்டுள் ளன.

(ஆ) ஆம்.

1979 மார்ச் 21

(இ) கோவை மாவட்டம் காட்டூர் பகுதியில் உள்ள தமிழக ஜனநாயக மாதர் சங்கம், தரமுள்ள மருந்துகள் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தேவையான அளவு இருப்பு இல்லை என்று புகார் செய்தார்கள். அதன் பேரில் மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு கேட்டுக் கொண்டது. இது சம்பந்தமாக மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் அனுப்பிய குறிப்புரையின் வாயிலாக அம்மருத்துவ மனையில் தேவையான அளவு தரமுள்ள மருந்துகள் இருப்பு இருக்கின்றன என்றும் அறிந்து அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தரமான விலை உயர்ந்த நல்ல மருந்துகளை அங்கே தேவையான அளவுக்கு கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்வதை வரவேற்கிறேன். ஆனால், மக்களிடமிருந்து இன்னமும் அவர்களுக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற முக்கியமான நோய்களுக்கு இன்ஜெக்ஷன் மருந்துகள் போன்ற விலை உயர்ந்த மருந்துகள் கொடுக்கவில்லை என்றும் டாக்டர்கள் அதை எழுதி கொடுத்துவிட்டு நீங்களே வாங்கி வாருங்கள் என்று சொல்கிறார்கள் என்றும் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது எந்த மருந்துகளும்—விலை உயர்ந்த இன்ஜெக்ஷன் மருந்து என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட எந்த இன்ஜெக்ஷன் மருந்துகளும்—கோவை மருத்துவ மனையில் இருக்கின்றன. அங்கே தேவையான நோய்களுக்கு தேவையான மருந்துகள் தரப்பட்டிருக்கின்றன. சில நேரங்களில் ஒரே பெயருடைய பல்வேறு கம்பெனிகளால் தயாரிக்கப்படுகிற மருந்துகள் இருக்கின்றன. மக்களே தங்களுக்கு இந்த மருந்துகள் வேண்டும் என்று சில மருந்துகளை குறிப்பிட்டு கேட்கிறார்கள். அவர்கள் கேட்கும் மருந்துகளுக்கு நிகரான வேறு மருந்துகள் மருத்துவ மனையில் இருக்கும். ஆனால் அவர்கள் கேட்கிற மருந்துகள் தான் அங்கே இருக்காது என்ற புகார்கள் வந்திருந்தால் வந்திருக்கும். தவிர நோய் தீர்ப்பதற்கான மருந்துகள் அங்கே இல்லை என்று கூறப்படுவது சரியல்ல.

[முற்பகல் 9—40.]

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவையில் உள்ள மாவட்ட மருத்துவ மனைக்கு அரசின் சார்பில் வழங்கப்படுகிற மருந்துகளில் பாதி மருந்துகளை அங்கே வேலை செய்கிறவர்

களே கடத்திக் கொண்டு சென்று விடுகிறார்கள் என்பது உண்மையா? அப்படிப்பட்ட புகார்கள் ஏதேனும் தந்தால் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த மருத்துவ மனையில் மருந்துகள் திருட்டுப் போகிறது என்று இங்கே எடுத்துச்சொன்னார்கள். நான் கோவை சென்ற பல நேரங்களில் திடீரென்று அந்த மருத்துவ மனைக்குச் சென்று இருப்பு மருந்துகளை கணக்கிட்டு இருக்கிறேன். மருந்துகள் களவு போவது இப்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது. விவரம் தந்தால் நடவடிக்கை எடுப்பார்களா என்று கேட்டார்கள். நிச்சயமாக அப்படி ஒரு தகவல் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் உள்ள பாதி மருந்துகள் களவு போகிறதா இல்லையா என்பது தெரியவில்லை. ஆனால் நிறைய மருந்துகள் திருட்டுப் போகிறது என்ற புகாரை நானே அரசுக்கு அனுப்பி இருக்கிறேன். அதன் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்தது. அங்கே ஸ்டாக்கில் வைக்கும் மருந்துகள் திருட்டுப்போகாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? மருந்துகள் மீது ஏதேனும் அடையாளம் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? வெளியில் எடுத்துச்சென்றால் அவற்றைக் சண்டு பிடிக்க முறை ஏதேனும் வைக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனையில் மருந்துகள், மாத்திரைகள் திருடப்படுகிறது என்று வந்த குற்றச்சாட்டுகளின் மீது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த மாதிரி திருட்டுக்களை நிறுத்தவேண்டும் என்பதற்காகத்தான் இந்த அரசு பொறுப்பேற்ற உடனே மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் அரசு மருத்துவ மனைகளில் தரப்படுகிற மருந்துகளில் அரசின் சின்னம் பொறிக்கப்படவேண்டும், அரசின் பெயர் பொறிக்கப்படவேண்டும் என்று திட்டத்தை உருவாக்கி, அது பரிசீலனை செய்யப்பட்டு, அதை அமல் படுத்துவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

திரு. ஆ. நடராசன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மருந்துகள் திருட்டுப்போனதற்காக யார் மீதாவது வழக்குகள் போடப்பட்டு இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

1979 மார்ச் 21]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது கோவை மருததுவ மனையைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் எந்த மருத்துவ மனையில் திருட்டுப்போனது பற்றிக் கேட்கிறார் என்று தெரியவில்லை. கோவை மருத்துவ மனையில் அப்படி திருட்டுப்போனதாக வந்துள்ள விவரத்தில் இல்லை.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவா அவர்களே, அந்தத் துறைத் தலைவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி எவ்வளவு ரூபாய்க்கு மருந்துகள் வாங்க அரசு அனுமதி அளித்து இருக்கிறது. அப்படி வாங்குகிற மருந்துகள், எத்தனை நாளைக்கு எத்தனை நோயாளிகளுக்கு தரப்பட்டு வருகிறது, ஆஸ்துமா போன்ற நோயாளிகளுக்கு வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை தொடர்ந்து மருந்து கொடுக்க அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, துறைத் தலைவர்கள் ரூ. 20,000 மதிப்புள்ள மருந்துகள் வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். அரசு மருத்துவ மனைகளில் தரமான மருந்துகள் வாங்கும் நோக்கத்துடன் மத்திய, மாநில அரசு நிறுவனங்களில் இருந்து நேரடியாக ஒப்பந்தப்புள்ளி இல்லாமல் மருந்துகள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மருத்துவ மனைகளில் நோயாளிகளைச் சோதித்த மருத்துவர்களின் அறிவுரையின் அடிப்படையில் மருந்துகள் வழங்கப்படுகின்றன. வெளிநோயாளிகளுக்கு இரண்டு நாளைக்கு சேர்ந்தார்போல் மருந்துகள் வழங்கப்படுகின்றன. அதற்குப் பிறகு அவர்களுடைய உடல் நிலைக்கு ஒத்த தேவைக்கு ஏற்ப மருந்துகள் வழங்கப்படுகின்றன. ஆஸ்துமா நோயாளிகளுக்கு ஒரு வாரத்திற்கு மருந்து கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். ஆஸ்துமா நோய்க்கு வழங்கப்படுகின்ற மருந்துகளை சில நேரங்களில் அதிகமாக அந்த நோயாளிகள் சாப்பிட்டு விடுவார்களானால் அவர்களுடைய உயிருக்கே அது ஆபத்தை விளைவிக்கும் தன்மை பெற்ற மருந்தாகும். ஆகவே, ஒரு வாரத்திற்கு வழங்குவது கொஞ்சம் கடினம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்ட காவல்துறையினர் குடியிருப்புகள்.

*வினா எண். 500— திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம மாவட்டத்தில் காவல் துறையினருக்கு புதிய குடியிருப்புகள் ஏற்படுத்தும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா?